# காரைக்குடி நகராட்சி

## 23.08.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை திருமதி.கே.எம்.சுதா, தனி அலுவலர்

## மன்றப்பொருள்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 23.08.2021 | 1 | 84. காரைக்குடி நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 13.75 ச.கி.மீ ஆகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகரில் மக்கட்தொகை 106714 ஆகும். நடப்பு ஆண்டில் (2021) இந்நகரின் உத்தேச மக்கள் தொகை 128152 ஆகும். இந்நகராட்சி 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.<br>இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு போதுமான தூய்மைப் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அரசாணை (நிலை) எண்.101/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நம3) துறை, நாள் 30.04.1997ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 2016ல் இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவைப்படும் தூய்மைப் பணியாளர்கள் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு அதில் அப்போது பணியில் இருந்த நிரந்தர தூய்மைப் பணியாளர்களை கழித்து மீதம் உள்ள கீழ்கண்டுள்ள எண்ணிக்கையிலான பணியாளர்களை OUTSOURCING முறையில் பணிக்கு எடுத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக ஒப்புதல் (PRINCIPAL CLEARENCE) வழங்கப்பட்டது.<br>1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண்.K.DB.No.7917/P3/2017 நாள் 23.08.2017ல் 133 தூய்மைப் பணியாளர்களை மூன்று ஆண்டு காலம் பணிக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டு, அதன் பணிக்காலம் வருகிற 27.09.2021ல் முடிவடையும் நிலை உள்ளது.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண்.31962/பி3/2016, நாள் 28.12.2016ல் 97 தூய்மைப் பணியாளர்களை மூன்று ஆண்டு காலம் பணிக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டு, அதன் பணிக்காலம் வருகிற 02.12.2021ல் முடிவடையும் நிலை உள்ளது.<br>மேற்கண்டுள்ளவாறு அனுமதிக்கப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் அனுமதிக் காலம் முடிவடையும் நிலையில் உள்ளதால் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் தூய்மைப் பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்றிட வேண்டியுள்ளது.<br>அதன்பேரில் அரசாணை நிலை எண்.101, நாள் 30.04.1997ன்படி தற்போதைய நிலையில் இந்நகராட்சியில் தேவைப்படும் தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது. | தீர்மான எண்.84<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | பணியின் விபரம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அனுமதிக்கப்பட்ட (SANCTIONED) தூய்மைப் பணியாளர் எண்ணிக்கை | 268 |
| 2 | அரசு ஆணை எண்.101ன்படி 2021ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உத்தேச வீடுகளின் எண்ணிக்கை - 31674<br>அரசாணை எண்.101ன்படி 250 வீடுகளுக்கு 3 பணியாளர்கள் வீதம் 31674 வீடுகளுக்கு | 380 |
| 3 | 3 லாரிகளுக்கு - 1 லாரிக்கு 4 பணியாளர்கள் வீதம் (3x4) | 12 |
| 4 | காம்பேக்டர் லாரிக்கு 1 லாரிக்கு 2 பணியாளர்கள் வீதம் 2 காம்பேக்டர் லாரிகளுக்கு (2x2) | 4 |
| 5 | உரக்கிடங்கு பணிகளுக்கு (RRC) | 4 |
| 6 | பேருந்துநிலைய தூய்மைப் பணிகள் (2x2) | 4 |
| 7 | தினசரி காய்கறி சந்தை துப்புரவு பணி | 4 |
| 8 | நுண்ணுயிர் செயலாக்க மையம் 1க்கு 4 பணியாளர்கள் வீதம் 5 நுண்ணுயிர் செயலாக்க மையத்திற்கு | 20 |
| | மொத்தம் | 428 |
| | தற்பொழுது பணியில் உள் நிரந்தர தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை | 118 |
| | மீதம் தேவைப்படும் தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை | 310 |

மேற்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு தேவைப்படும் 310 தூய்மைப் பணியாளர்களை OUTSOURCING முறையில் பணிக்கு எடுத்துக்கொள்ள சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2021-2022ம் ஆண்டு ஊதிய விகிதப்படி ஆண்டு செலவினம் ரூ.638.00 இலட்சம் ஏற்படுகிறது.

மேற்கண்டுள்ள ஆண்டு செலவினத்திற்கும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவைப்படும் 310 தூய்மைப் பணியாளர்களை OUTSOURCING முறையில் பணிக்கு எடுத்துக்கொள்ள நிர்வாக ஒப்புதல் (PRINCIPAL CLEARENCE) வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் மற்றும் முன்மொழிவுகள் அனுப்பிவைத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அனுமதிக்கலாம்.

**2**

85. இந்நகராட்சிக்கு சொந்தமான கல்லுக்கட்டி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் நிறுத்தத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. கடந்த 01.04.2019 முதல் 23.11.2020 வரை துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வந்தது. மேற்படி துறை மூலம் வசூலி பணி மேற்கொள்ள இரண்டு அலுவலக உதவியாளர்களை கொண்டு பகல் மற்றும் இரவு நேரங்களில் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது. துறை மூலம் வசூல் பணி

தீர்மான எண்.85 அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொண்ட காலங்களில் இருசக்கர வாகனங்கள் உரியவாறு வரப்பெறாததால் தினந்தோறும் வசூல் செய்யும் தொகை குறைவாகவும், இரண்டு பணியாளர்களின் ஊதியம் தொகைக்கு கூட வசூல் செய்யவில்லை.<br>மேலும் இக்காலகட்டங்களில் "கொரோனா வைரஸ்" தொற்று நோய் காரணமாக போக்குவரத்து இல்லாமலும், தமிழக அரசால் பொது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாலும் வசூல் மிக குறைந்த அளவிலேயே இருந்தது. அதனை தொடர்ந்து பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதால் பேருந்து போக்குவரத்து இல்லாததால் இருசக்கர வாகனங்கள் நிறுத்தத்தில் வாகனங்கள் மிக குறைந்த அளவே நிறுத்தப்பட்டு வந்ததால் 24.11.2020 முதல் மேற்படி வாகன நிறுத்தம் மூடப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் 01.04.2019 முதல் தொடர்ந்து பலமுறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் வருகிறது. இதுநாள் வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. எனவே போதிய வாகனங்கள் வரப்பெறாததால் மேற்படி இனத்தை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை துறை மூலம் வசூல் பணி மேற்கொள்வதை நிறுத்தி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4873/2020/அ1) | |
| | 3 | 86. இந்நகராட்சி சாத்தப்பா பூங்கா வளாகத்திற்குள் அமைந்துள்ள ஆணையர் குடியிருப்பு மற்றும் பொறியாளர் குடியிருப்பை சுற்றி பாதுகாப்பை கருதி புதிதாக 8 எண்ணம் CCTV கேமரா, DVR மற்றும் HARD DISK ஆகியவைகளை பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.311/2019/இ1) | தீர்மான எண்.86 அனுமதிக்கப்பட்டது |
| | 4 | 87. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவமழையின் போது சேதமடைந்த சாலைகளை சரிசெய்ய வேண்டி வார்டு எண்.6, செக்காலை முதல் வீதி,இரண்டாம் வீதி மற்றும் வார்டு எண்.19,திருவள்ளுவர் சாலை ஆகிய சாலைகள் மோசமான நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது, ஆதலால் அதனை சரிசெய்யும் பொருட்டு,அச்சாலையினை சீரமைப்பு (பேட்ச் வொர்க்) செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2880/2021** | தீர்மான எண்.87 அனுமதிக்கப்பட்டது |
| | 5 | 88. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, கல்லூரி சாலை, சுப்பிரமணியபுரம் பகுதியில் சண்முகம் பிள்ளை தெருக்களில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளும்போது சாலைகளின் மையப்பகுதி தோண்டி எடுக்கப்பட்டு மேற்கொண்டதில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அப்பகுதியில் உள்ள மக்கள் வெளியில் சென்றுவர மிகவும் சிரமப்படுவதால், அந்த சாலைப்பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.88 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2880/2021/இ1** | |
| | 5 | 89. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, ஜீவா நகர் மற்றும் காமராஜர் தெருக்களில் மழைநீர் வடிகால் வசதி இல்லாததால், அவ்வப்போது பெய்துவரும் பருவ மழையினால் அப்பகுதியில் தேங்கி மக்கள் அவதிப்படுகின்றனர். ஆகையால் அப்பகுதியில் புதியதாக கல்வெட்டுடன் கூடிய மழைநீர் வடிகால் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2880/2021/இ1** | தீர்மான எண்.89 அனுமதிக்கப்பட்டது |
| 23.08.2021 | 6 | **90.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, எம்.ஜி.சாலை மற்றும் சூடாமணிபுரம் அல்லி தெருவில் மழைநீர் வடிகால்கள் இல்லாததால், அவ்வப்போது பெய்துவரும் பருவமழையின் போது அப்குதியில் தண்ணீர் தேங்கி சீர்கேடாக இருக்கின்றன. ஆகையால் அப்பகுதி மக்களின் நலனை கருத்தில் கொண்டு புதியதாக சிறு பாலமுடன் கூடிய வடிகால் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2880/2021/இ1** | தீர்மான எண்.90 அனுமதிக்கப்பட்டது |
| | 7 | 91. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 காமராஜர் 3வது வீதி மண்சாலையாக இருப்பதால் வெளியில் சென்றுவரும் அப்பகுதி மக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகையால் அப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு புதிய தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2880/2021/இ1** | தீர்மான எண்.91 அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி